பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

தே.செ.வெ.எண். 89 **நாள்: 13.04.2026**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில், எண்.20 ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொதுப் பார்வையாளர் மற்றும் தேர்தல் செலவினப் பார்வையாளர் தலைமையில் வேட்பாளர்களுடனான தேர்தல் செலவினம் மற்றும் தேர்தல் விதிமுறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் – 2026னை முன்னிட்டு, எண்.20 ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொதுப் பார்வையாளர் திரு. வீரேந்திர குமார், இ.ஆ.ப., (Mr. Virendra Kumar, I.A.S.,) அவர்கள், தேர்தல் செலவினப் பார்வையாளர் திரு.பவன் லால் மீனா, இ.வ.ப., (Mr. Bhavan Lal Meena (IRS (C & CE)) அவர்கள் தலைமையில், தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி ஐ.வளர்மதி அவர்கள் முன்னிலையில், ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி வேட்பாளர்களுடன் தேர்தல் செலவினம் மற்றும் தேர்தல் விதிமுறைகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் 11.04.2026 அன்று நுங்கம்பாக்கம் தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தில் நடைபெற்றது.

தேர்தல் பொதுப் பார்வையாளர், தேர்தல் செலவினப் பார்வையாளர் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் சம்பந்தப்பட்ட வேட்பாளர்களுடன் தேர்தல் செலவினம் மற்றும் விதிமுறைகள் தொடர்பாக கலந்துரையாடி பல்வேறு அறிவுரைகளை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி வேட்பாளர்கள் மற்றும் தேர்தல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

“தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா”

செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி